**CC.No.275/2025 (JM.No.II, DHARMAPURI)**

**02.02.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரி ஆஜர் இல்லை)**

**PW–2 : திரு.பூமாலை, த/பெ. ராஜேந்திரன்**

<u>முதல் விசாரணை</u>

நான் தொம்பரகாம்பட்டியில் குடியிருந்து கொண்டு வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன். எதிரி கார்த்திகேயனை எனக்கு தெரியாது. இந்த விபத்து இறந்து போன முனிராஜ் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 03.09.2025 அன்று இரவு சுமார் 11.00 மணிக்கு தொம்பரகாம்பட்டியில் எங்களுடைய ஹோட்டல் அருகே நாங்கள் பேசி கொண்டிருந்த போது திடீரென்று சத்தம் கேட்டது. எங்களுக்கு எதிரே ஒரு பேருந்து வந்து நின்றது. இரண்டு நிமிடம் கழித்து அந்த வாகனத்தின் ஓட்டுநர் வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார். ஐந்து நிமிடம் கழித்து எங்கள் வீட்டின் எதிரே உள்ள நபர் ரோட்டின் ஓரமாக ஒரு பாடி இருக்கிறது என்று போனின் மூலம் தகவல் சொன்னார். நான் சென்று பார்த்த போது அவர் எனக்கு தெரிந்த முனிராஜ் என்ற நபர் தான். அவர் பேச்சு, மூச்சின்றி இருந்தார். அருகில் இருந்த நபர்கள் சம்பவயிடத்திற்கு வந்து 108 ஆம்புலென்ஸ் மற்றும் தொப்பூர் காவல் நிலையத்திற்கும் தகவல் சொன்னார்கள். இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

03.09.2024 அன்று 55.00 மணிக்கு தொம்பரகாம்பட்டி Ato B பாரத் பெட்ரோல் அருகே உள்ள கௌதம் ஹோட்டல் அருகே நின்று கொண்டிருந்ததாகவும்,அப்போது இந்த விபத்தில் இறந்த முனிராஜ் என்பவர் NH ரோட்டிற்கு இடையே உள்ள சென்டர் மீடியனில் இறங்கி கிழக்கிலிருந்து மேற்காக சேலம் to தருமபுரி தேசிய நெடுஞ்சாலையை நடந்து கடந்த போது சேலம் பக்கமிருந்து தருமபுரி நோக்கி வந்த NL 01 B1581 ஆம்னி பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் ஓட்டிவந்து முனிராஜ் என்பவரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், அதில் அவருக்கு பின்பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு காது மற்றும் வாயில் இரத்தம் வந்ததாகவும், அந்த சம்பவத்தை நேரில் பார்த்த நானும், அங்கு வந்த நபர்களும் முனிராஜின் மனைவி காந்திமதிக்கு போனின் மூலம் தகவல் சொன்னதாக போலிஸார் விசாரணையில் கூறிவிட்டு, இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லைஎன்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**குறுக்குவிசாரணை**</u> – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.02 17:47:07 +0530

CC.No.275/2025 (JM.No.II, DHARMAPURI)

02.02.2026

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. ( எதிரி ஆஜர் இல்லை)**

**PW-3 : திரு.சக்திவேல், த/பெ. மாதையன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வெள்ளக்கல்லில் குடியிருந்து கொண்டு டீக்கடை வைத்து வருகிறேன். பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. கடந்த 2024 ம் வருடம் ஒரு நாள் காலை 08.00 மணிக்கு தொம்பரகாம் பட்டியில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே காவல் துறையினர் விபத்து நடந்த அடுத்த நாள் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். அதில், நானும், என்னுடைய அண்ணா சிவக்குமார் என்பவரும் சாட்சியாக இருந்து கையெழுத்திட்டோம். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து போலிஸார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இந்த விபத்து குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். என்னிடம் போலிஸார் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து பெற்றனர் என்றால் சரியல்ல. போலிஸார் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து தான் மேற்படி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும், நான் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்தததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.02 17:47:52 +0530